# 1 ம், 2 ம் நாளாகமம்.

1ம், 2ம் நாளாகமப்புத்தகங்கள் 2 சாமுவேல் புத்தகம் தொடங்கி 2 இராஜாக்கள் வரையான காலப்பகுதியில் நடந்த சம்பவங்களை விபரிக்கின்றன. இராஜாக்கள் புத்தகம், ஒன்றாயிருந்த இஸ்ரவேல் இருநாடாக பிரிந்து தேவனிடமிருந்து பின்வாங்கிப் போய்க்கொண்டிருந்த நிலமையை கூறுகின்றது. இறுதியில் சிறைபிடிக்கப்பட்டு நாடு கடத்தப்படுவதையும் விபரிக்கின்றது. நாளாகமப்புத்தகம் யூதர்களின் சிறையிருப்பிற்குப் பிற்பட்ட காலங்களையும், அங்கிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குத் திரும்பி வருவதையும் விஸ்தரிக்கின்றது. சாமுவேல், இராஜாக்கள் புத்தகங்கள் போலவே 1ம், 2ம், நாளாகமப் புத்தகங்களும் ஒரே புத்தகமாகவே ஆரம்பத்தில் இருந்தது. செப்டுவானிக் மொழிபெயர்ப்பாளர்களினாலேயே முதலில் இப்புத்தம் இரண்டு புத்தகங்களாக பிரிக்கப்பட்டன.

**பிரதான திறவுகோல்:- கர்த்தருடைய குமாரன் வெளிப்படுத்தப்படல்.**

1 இராஜாக்கள் புத்தகம் போலவே 1 நாளாகமப் புத்தகத்திலும் தேவகுமாரன் நிழலாட்டமாக வெளிப்படுத்தப்படுகின்றார். 1ம் நாளாகமப் புத்தகத்தில் ஆலயத்தில் மறைபொருளாக கிறிஸ்து வெளிப்படுகின்றார். 1ம் நாளாகமம் 21ம் அதிகாரம் ( 2 சாமு 24) பாவத்தின் விளைவைக் கூறுகின்றது. சாவுக்கேதுவான கொள்ளை நோய் இஸ்ரவேலர்களுக்கு எதிராக ஏற்படுகின்றது. இந்தக் கொள்ளை நோயை நிற்பாட்டுவதற்காக ஒரு நிலத்தை தாவீது வாங்கி, அங்கே பலிசெலுத்தினான். இந்த இடம் மோரியமலையாகும் இந்த மலையில்தான் சாலொமோன் கட்டிய ஆலயம் அமைந்தது, (2நாளா.3;1) இங்கேதான் ஆபிரகாமினது ஒரே மகனாகிய ஈசாக்கை பலியிடும்படி கேட்கப்பட்ட இடமுமாகும்,( ஆதி. 22;2)

புதிய ஏற்பாட்டில், பரி.பவுல் விசுவாசிகளைப்பார்த்து “நீங்களே கர்த்தருடைய ஆலயம்” என்று கூறியுள்ளார். (1 நாளா. 3:16–17 6:19 எபே. 2:19-22). கிறிஸ்து எங்களை தனது ஆலயமாக தமது இரத்தத்தினால் மீட்டுக் கொண்டுள்ளார். அவருடைய பலி எங்களை மரணத்திலிருந்து விடுதலையாக்கிற்று.

1ம் 2ம் நாளாகமம்.

**பெயர், எழுதியவர், புத்தகத்தின் கருத்து**;- 1ம் 2ம் நாளாகமப் புத்தகங்கள் ஆரம்பத்தில் ஒருபுத்தகமாகவே இருந்தன. அவை நாளாகமம் என்று அழைக்கப்பட்டன. அதாவது சரித்திரத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள் யாவும் குறிப்பிடப்பட்டு பதிவு செய்யப்படுதலாகும்.

***எழுதியவர்:-*** 1ம் நாளாகமம் எழுதியவர் யாரெண்று தெரியாது. எஸ்றா என்று நம்பப்படுகின்றது.

**காலமும் இடமும்:-** அதிகாரம் 1-9இல் கூறப்பட்டுள்ள வம்சாவழிக்கு அப்பால் 1ம்,2ம், நாளாகமம் சவுலின் மரணத்திலிருந்து கோரேசுவின் கட்டளை வெளியிடப்பட்ட காலமாக கி.மு 1010–538 கணிக்கப்படுகின்றது. எப்படியோ செருபாபேலுடைய வம்சாவழியானது கி.மு. 538ற்கு அப்பால் கூறப்பட்டுள்ளது. இந்த இரண்டு புத்தகங்களும் சிறையிருப்புக்காலத்திற்குப் பிற்பட்ட காலமாகிய கி.மு. 450–430. காலப்பகுதியில் எருசலேமில் எழுதி முடிக்கப்பட்டுள்ளது அங்கேயே பதிவுகள் பேணப்பட்டுள்ளது. (விசேடமாக 1000-538 கி.மு காலப்பகுதியில் இடம்பெற்ற நிகழ்வுகள் கி.மு. 450–430 காலப்பகுதியில் எழுதி முடிக்கப்பட்டதாகும் சாலமோனின் ஆட்சி 970கி.மு தொடங்கி பாபிலோனிய சிறையிருப்பு வரையிலான காலப்பகுதி கி.மு. 586 ல் இடம்பெற்றது. பின்பு நடைபெற்ற சிறையிருப்பிற்குப் பிற்பட்ட காலப்பகுதிகளும் இடம்பெற்றன.

***திறவுகோல் வார்த்தை:- தாவீதின் ஆட்சி***

***திறவுகோல் வசனங்கள். (17:11-14; 29:11–*** (17:11-14).

நீ உன்பிதாக்களிடத்திலே போக, உன்நாட்கள் நிறைவேறும் போது, நான் உனக்குப் பின்பு உன்புத்திரரில் ஒருவனாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் இராஜ்யத்தை நிலைப்படுத்துவேன். அவன் எனக்கு ஒரு ஆலயத்தைக்கட்டுவான். அவன் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன். நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான். உனக்கு முன்னிருந்தவனை விட்டு என்கிருபையை நான் விலகப்பண்ணினது போல, அவனை விட்டுவிலகப்

பண்ணாமல், அவனை என் ஆலயத்திலும் என் இராஜ்யத்திலும் என்றென்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன். அவனுடைய இராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும் என்று சொல் என்றார். கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள். வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, இராஜ்யமும் உம்முடையது. தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்.

***திறவுகோல் அதிகாரம்.*** *(17)–*
அவனை என் ஆலயத்திலும் என் இராஜ்யத்திலும் என்றென்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன். அவனுடைய இராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும் என்று சொல் என்றார்.

***திறவு கோல் முக்கிய மனிதர்கள்:-*** *தாவீது, நாத்தான்வேல், பத்சேபாள், உரியா*

**கர்த்தருடைய ஆவியானவரின் கிரியை :-**

இரண்டு சந்தர்ப்பங்களில் பரிசுத்த ஆவியானவரின் தெளிவான செயற்பாடுகளை இங்கு காணலாம். முதலாவது 12 :18இல், அமாசாய் மீது கர்த்தருடைய ஆவியானவர் வந்து தேவ வார்த்தைகளை சொல்வதைக் காணமுடிகின்றது. இரண்டாவதாக 28:12 இல், கர்த்தருடைய ஆவியானவர் ஆலயத்தின் திட்டத்தை தாவீதிற்கு வெளிப்படுத்தல்.

| **சாமுவேல்- இராஜாக்கள்** | நாளாகமங்கள் |
|---|---|
| • தீர்க்கதரிசன நோக்கம். | • ஆசாரிய நோக்கம். |
| • அரசியல் சரித்திரம் | • மதச் சரித்திரம். |
| • போருக்கு முக்கியத்துவம் | • ஆலயமுக்கியத்துவம். |
| • இரண்டு இராஜ்ஜியங்களின் பதிவு | • இராஜ்ஜியத்தின்பதிவுகள். |
| • தேசத்தின் சரித்திர தொடர்ச்சி | • தாவீதின் பரம்பரையின் தொடர்ச்சி |
| • மனிதனின் தோல்வி | • கர்த்தரின் விசுவாசம் |

## 1 நாளாகம சுருக்கம்

### பகுதி ஒன்று:- தாவீதின் அரச பரம்பரை (1:1-9:44)

**I. ஆதாம் முதல் ஆபிரகாம் வரையிலான மரபுவழி 1:1-27**

இஸ்ரவேல் ஒவ்வொருவருக்கும் வம்சாவழி தெரிந்திருந்தது. அவ்வம்சாவழிப் பட்டியலூடாகவே ஆபிரகாமினூடாக தாவீதின் வழியில் கிறிஸ்து தோன்றுவார் என்ற தீர்கதரிசன நிறைவேறுதலையும் வம்சாவழி பட்டியல் உறுதிப்படுத்துகிறது. புதிய ஏற்பாட்டு சுவிஷேச புத்தகங்களில் காணலாம். தாண் கோத்திரம் குறித்து இப்பட்டியலில் குறிப்பிடப்படவில்லை.

A. **ஆதாம் முதல் நோவா வரையிலான மரபுவழி** 1:1-4

B. நோவா முதல் ஆபிரகாம் வரையிலான மரபுவழி 1:5-27

**II. ஆபிரகாம் முதல் யாக்கோபுவரையிலான மரபுவழி 1:28-54**

A. ஆபிரகாம் முதல் ஈசாக்கு வரையிலான மரபுவழி 1:28-34

B. ஈசாக்கு முதல் யாக்கோபு வரையிலான மரபுவழி 1:35-54

**III. யாக்கோபு முதல் தாவீது வரையிலான மரபுவழி 2:1-55**

A. யாக்கோபு பிள்ளைகளின் மரபுவழி 2:1, 2

B. **யூதாவின் பிள்ளைகளின் மரபுவழி** 2:3-55

**IV. தாவீது முதல் சிறையிருப்பு வரையிலான மரபுவழி 3:1-24**

A. தாவீதின் பிள்ளைகளின் மரபுவழி 3:1-9

B. சாலொமோனின் பிள்ளைகளின் மரபுவழி 3:10-24

**V. 12 கோத்திரங்களின் மரபுவழி 4:1-8:40**

A. யூதாவின் மரபுவழி 4:1-23

4:10.யாபேசின் ஜெபம்: யாபேஸ் என்றால் துக்கம்

உண்டாக்குகிறவன் என்று பொருள். அவருடைய ஜெபமானது உமது கரம் என்னோடு இருந்து என்று கேட்டதானது கர்த்தரை சார்ந்து வாழ்வதற்கான விண்ணப்பமாயிருந்தது. என்னை ஆசீர்வதியும் என் எல்லைகளை பெரிதாக்கும். உமது கரமென்னோடு இருக்க வேண்டும். தீங்குக்கு விலகி காத்தருளும் என்று விண்ணப்பித்தான். அவன் வேண்டியதை தேவன் அருளினார்.

B. **சிமியோனின் மரபுவழி** 4:24-43

C. **ரூபனின் மரபுவழி** 5:1-10

5:1.ஆசீர்வாதங்களை இழந்த ரூபன். பாலியல் இச்சைகளுக்கு இடம் குடுக்கலாகாது. பரிசுத்தத்திற்கு முக்கிய இடம் குடுத்தல் வேண்டும்.

D. **காத்தின் மரபுவழி** 5:11-22

E. **மனாசேயின் மரபுவழி** 5:23-26

F. **லேவியின் மரபுவழி** 6:1-81

G. **இசக்காரின் மரபுவழி** 7:1-5

H. **பென்ஜமின் மரபுவழி** 7:6-12

I. **நப்தலியின் மரபுவழி** 7:13

J. **மனாசேயின் மரபுவழி** 7:14-19

K. **இப்பிரகாமின் மரபுவழி** 7:20-29

L. **ஆசேரின் மரபுவழி** 7:30-40

M. **பென்ஜமீன் மரபுவழி** 8:1-40

**VI.** மிகுதியானவர்களின் மரபுவழி **9:1-34**

A. **மீண்டு வந்த** 12 **கோத்திரங்களின் மரபுவழி** 9:1-9

B. **மீன்டுவந்த ஆசாரியர்களின் மரபுவழி** 9:10-13

C. மீண்டுவந்த லேவியர்களின் மரபுவழி 9:14-34

**VII.** சவுலின் மரபுவழி 9:35-**44**

**பகுதி இரண்டு: தாவீதின் ஆட்சி (10:1-29:30)**

**I.** தாவீதின் பதவியேற்பு **10:1-12:40**

A **சவுலின் மரணம்.** 10:1-13

சவுலின் மரணத்துக்குரிய காரணங்கள் 10:13 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. கர்த்தருடைய வார்த்தையை கைக்கொள்ளாமல் மக்களின் நலனில் தேவ சித்தப்படி ஆளுகைசெய்யாது தேவ பயமற்று அஞ்சனம் பார்பவர்களையும் குறிசொல்லுபவர்களையும் நாடியதால் இறுதியில் கர்த்தர் கைவிட்டார்.

B. **இராஜாவாக தாவீது அபிஷேகம் செய்யப்படல்.** 11:1-3 இஸ்ரவேலர் எல்லாரும் எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் கூடி வந்து: இதோ, நாங்கள் உம்முடைய எலும்பும் உம்முடைய மாம்சமுமானவர்கள். சவுல் இன்னும் ராஜாவாயிருக்கும் போதே, நீர் இஸ்ரவேலை நடத்திக் கொண்டு போய் நடத்திக்கொண்டு வருவீர். என்ஜனமாகிய இஸ்ரவேலை நீர் மேய்த்து, என் ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் தலைவனாயிருப்பீர் என்று உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்குச் சொல்லியும் இருக்கிறார் என்றார்கள். அப்படியே இஸ்ரவேலின் மூப்பரெல்லாரும் எப்ரோனிலே ராஜாவினிடத்தில் வந்தார்கள். தாவீது எப்ரோனிலே கர்த்தருக்கு முன்பாக அவர்களோடு உடன்படிக்கை பண்ணிக் கொண்டபின்பு, கர்த்தர் சாமுவேலைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே அவர்கள் தாவீதை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள்.

C. **எருசலேம் வெற்றி கொள்ளப்படல்** 11:4-9

D. **தாவீதின் வீரர்களின் எண்ணிக்கை** 11:10-12:40

**II.** உடன்படிக்கைப் பெட்டி பெற்றுக் கொள்ளல். **13:1-17:27**

தலைவர்களோடு ஆலோசனை பண்ணி உடன்படிக்கையை கொண்டிவர முடிவுசெய்தமையானது.தாவீது நல்ல தலைவன் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

A. **உடன்படிக்கைப் பெட்டியை முறையற்ற விதத்தில் கொண்டு செல்லல்.** 13:1-14

B. **தாவீதின் ஆட்சி விருத்தியடைதல்.** 14:1-17
10:17 யுத்தத்திற்கு போகமுன்னர் கர்த்தரிடம் கேட்டு அவரின் அனுமதிஇவழிநடத்தலுடன் யுத்தம் செய்து வெற்றியடைந்தான்.

C. **முறையான விதத்தில் உடன்படிக்கைப் பெட்டி கொண்டு செல்லப்படல்.** 15:1-29
கர்த்தருடைய விருப்பப்படி அவர் கூறிய முறையின்படி காரியங்கள் செய்வதுஇஆராதிப்பது உறவாடுவது ஊழியம் செய்வது முக்கியமானது.

D. எருசலேமில் உடன்படிக்கைப் பெட்டியின் கொண்டாட்டம். 16:1–43
8-36 கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் அவர் நாமத்தை உயர்த்தி மேன்மைபடித்தி அவர் செய்த நண்மைகளை கூறி ஆராதிக்க வேண்டும்.

F. தாவீதின் உடன்படிக்கை. 17:1–27
17:4 தாவீது ஆலயம் கட்ட ஆசைப்பட்ட போதும் கர்த்தர் அனுமதி மறுத்தார். தாவீது அதை ஏற்றுக்கொண்டு கட்டுவதற்கான முன்னேற்பாடுகளை செய்தார். 17-16 இள வயது (தன்னுடைய ஏழ்மையை) நிகழ்வுகளை நினைவுபடுத்தி தன்னை தாழ்த்தினார்.

**III. தாவீதின் யுத்த வெற்றிகள். 18:1-20:8**

A. **தாவீதின் வெற்றிகளின் சுருக்கம்.** 18:1-17

B. **தாவீதின் பிந்திய வெற்றிகளின் சுருக்கம்.** 19:1-20:8

**IV. இஸ்ரவேல் ஆலயத்திற்காக ஆயத்தம் பண்ணப்படல். 21:1-27:34**

A. **தாவீதின் தொகை மதிப்பீட்டமை பாவம்.** 21:1-30
மாம்சீக முடிவு: சாத்தானின் ஏவுதலுக்கு அடிபணிந்து தாவீது இஸ்ரவேலை தொகையிட வேண்டிக்கொண்டான். கர்த்தர் இருதயங்களை ஆராய்ந்து பார்ப்பவர். தாவீதின் உள்நோக்கம் பாவமானது. படையினரின் எண்ணிக்கை பார்த்து தாவீது தற்பெருமையடைய கூடும் என்பதால்

இக்காரியம் கர்த்தருடைய பார்வையில் ஆகாததாயிருந்தது. இதை அறிந்த தாவீது மன்னிப்புகோட்டு மனந்திரும்பினார். ஆனாலும் கர்த்தரின் தண்டனை 70000 இஸ்ரவேலரை சங்கரித்தார். தாவீது தனது தவறுக்கு மக்களை ஏன் தண்டிப்பான் என மனம் வருந்தியதால். இறுதியில் எபூசியனான ஒர்னானின் நிலத்தில் பலி செலுத்தினார். இந்த நிலத்திலேயே பின்னர் சாலொமோன் தேவாலயம் கட்டினார்.

B. **ஆலயம் கட்டுவதற்கான பொருள்கள் சேகரித்தல்.** 22:1-5
மகன் சாலொமோன் ஆலயம் கட்டுவதற்கு முன்னாயர்த்தம் செய்தார் தாவீது. நாமும் நமக்குபின் தேவ சித்தம் நிறைவேற உதவுவோமாக.

c. **ஆலய கட்டுமான வேலைகளுக்கான தலைவர்கள்.** 22:6-19

D. **ஆலயத் தலைவர்களின் ஒன்றியம்.** 23:1-26:32

E. ஆரோனின் புத்திரருக்கு சமமாக லேவியருக்கும் ஊழியம் பகிர்ந்துகுடுக்கப்பட்டது.
(24:31). ஆலய ஊழியத்தில் போட்டிகள் கசப்புகள் வராதபடி தாவீது திட்டமிட்டார்.

F. ஊழியத்தில் சரிசமனாய் மாணாக்கருக்கும் ஆசிரியருக்கும் சீட்டுப் போட்டார்கள்.
25: 8-31

G. **இஸ்ரவேல் தேசத்தாரின் ஒன்றியம்.** 27:1-34

**V. தாவீதின் இறுதி நாட்கள். 28:1-29:30**

A. **தாவீதின் இறுதி உரை** 28:1-10 கோத்திரங்களின் தலைவரும், இராஜாவைச் சேவிக்கிற வகுப்புகளின் தலைவரும், ஆயிரம் பேருக்கு அதிபதிகளும் , நூறுபேருக்கு அதிபதிகளும், இராஜாவுக்கும் இராஜகுமாரருக்கும் உண்டான எல்லா ஆஸ்தியையும் மிருக ஜீவன்களையும் விசாரிக்கிற தலைவருமாகிய இஸ்ரவேலின் சகல பிரபுக்களையும், பிரதானிகளையும், பலசாலிகளையும், சகல பராக்கிரமசாலிகளையும் தாவீது எருசலேமிலே கூடிவரச் செய்தான் அப்பொழுது இராஜாவாகிய தாவீது எழுந்திருந்து காலூன்றி நின்று: என்சகோதரரே, என்ஜனமே, நான் சொல்வதைக் கேளுங்கள். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும் நமது தேவனுடைய பாதபடியும் தங்குவதற்கு

ஒரு ஆலயத்தைக் கட்ட நான் என்மனதிலே நினைத்து, கட்டுகிறதற்கு ஆயத்தமும் பண்ணினேன். ஆனாலும் தேவன்: நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக்கட்ட வேண்டாம். நீ யுத்தமனுஷனாயிருந்து, ரத்தத்தைச் சிந்தினாய் என்றார். இப்போதும் இஸ்ரவேல் அனைத்தின் மேலும் என்றைக்கும் ராஜாவாயிருக்க, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் என்தகப்பனுடைய வீட்டாரிலெல்லாம் என்னைத் தெரிந்து கொண்டார். அவர் யூதாவையும் யூதாவின் வம்சத்தில் என்தகப்பன் குடும்பத்தையும் தலைமையாகத் தெரிந்து கொண்டு, என்னை எல்லா இஸ்ரவேலின் மேலும் ராஜாவாக்க, என்தகப்பனுடைய குமாரருக்குள் என்மேல் பிரியம் வைத்தார். கர்த்தர் எனக்கு அநேகம் குமாரரைத் தந்தருளினார். ஆனாலும் இஸ்ரவேலை ஆளும் கர்த்தருடைய ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தின் மேல் உட்காருகிறதற்கு, அவர் என்னுடைய எல்லாக் குமாரரிலும் என்குமாரனாகிய சாலொமோனைத் தெரிந்துகொண்டு, அவர் என்னை நோக்கி: உன் குமாரனாகிய சாலொமோனே என் ஆலயத்தையும் என் பிராகாரங்களையும் கட்டக்கடவன். அவனை எனக்குக் குமாரனாகத் தெரிந்து கொண்டேன். நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன். இந்நாளில் நடக்கிறபடியே அவன் என்கற்பனைகளின்படியும் என் நியாயங்களின்படியும் செய்ய உறுதியாயிருப்பானானால், அவன் இராஜ்யபாரத்தை என்றென்றைக்கும் திடப்படுத்துவேன் என்றார். இப்போதும் நீங்கள் என்றென்றைக்கும் இந்த நல்ல தேசத்தைச் சுதந்தரமாய் அநுபவித்து, உங்களுக்குப் பிறகு அதை உங்கள் பிள்ளைகளுக்குச் சுதந்தரமாய்ப் பின்வைக்கும் பொருட்டாக, நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் கைக் கொண்டு விசாரியுங்கள் என்று கர்த்தரின் சபையாகிய இஸ்ரவேல் அனைத்தின் கண்களுக்கு முன்பாகவும், நமது தேவனுடைய செவி கேட்கவும் உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன்பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாகமனதோடும் சேவி. கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார். நீ அவரைத்தேடினால் உனக்குத் தென்படுவார். நீ அவரை விட்டு விட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார். இப்போதும் எச்சரிக்கையாயிரு; பரிசுத்த ஸ்தலமாக ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்குக் கர்த்தர் உன்னைத் தெரிந்துகொண்டார்; நீதியுடன் கொண்டு அதை நடப்பி என்றுசொன்னான்.

B. ஆலயத்திற்கான இறுதி பொருள்கள் சேகரிப்பு 28:11-29:9

C. தாவீதின் இறுதி ஜெபமும் நன்றியுரையும். 29:10–19

ஆகையால் தாவீது சபை அனைத்தின் கண்களுக்கு முன்பாகவும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்திச் சொன்னது: எங்கள் தகப்பனாகிய இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே சதாகாலங்களிலும் தேவரீருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. கர்த்தாவே மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, இராஜ்யமும் உம்முடையது தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர். ஐசுவரியமும் கனமும் உம்மாலேவருகிறது; தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு; எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும். இப்போதும் எங்கள் தேவனே, நாங்கள் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, உமது மகிமையுள்ள நாமத்தைத் துதிக்கிறோம். இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம். உமக்கு முன்பாக நாங்கள் எங்களுடைய பிதாக்கள் எல்லாரைப் போலும் பரதேசிகளுமாயிருக்கிறோம். பூமியின் மேல் எங்கள் நாட்கள் ஒருநிழலைப் போல இருக்கிறது நிலைத்திருப்போம் என்னும் நம்பிக்கையில்லை. எங்கள் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய பரிசுத்த நாமத்திற்கென்று உமக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுகிறதற்கு, நாங்கள் சவதரித்திருக்கிற இந்தப் பொருள்கள் எல்லாம் உமது கரத்திலிருந்து வந்தது; எல்லாம் உம்முடையது. என்தேவனே, நீர் இருதயத்தைச் சோதித்து, உத்தம குணத்தில் பிரியமாயிருக்கிறீர் என்பதை அறிவேன்; இவையெல்லாம் நான் உத்தம இருதயத்தோடே மனப்பூர்வமாய்க் கொடுத்தேன்; இப்பொழுது இங்கேயிருக்கிற உம்முடைய ஜனமும் உமக்கு மனப்பூர்வமாய்க் கொடுக்கிறதைக் கண்டு சந்தோஷித்தேன். ஆபிரகாம் ஈசாக்கு இஸ்ரவேல் என்னும் எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, உமது ஜனத்தின் இருதயத்தில் உண்டான இந்தச் சிந்தையையும் நினைவையும் என்றைக்கும் காத்து, அவர்கள் இருதயத்தை உமக்கு நேராக்கியருளும். என் குமாரனாகிய சாலொமோன் உம்முடைய கற்பனைகளையும் உம்முடைய சாட்சிகளையும் உம்முடைய கட்டளைகளையும் கைக்கொள்ளும்படிக்கும், இவைகள் எல்லாவற்றையும் செய்து, நான்

ஆயத்தம் பண்ணின இந்த அரண்மனையைக் கட்டும்படிக்கும், அவனுக்கு உத்தம இருதயத்தைத் தந்தருளும் என்றான்.

D. சாலொமோனின் முடிசூட்டுவிழா. 29:20-25

E. தாவீதின் மரணம். 29:26-30

.......................................................................................................................................

**2 நாளாகமம் சுருக்கம்**

**இன் நூலின் சிறப்பு:- ஆலயம் கட்டியதை குறித்து பல தரவுகள் எழுதப்பட்டுள்ளது**

**திறவுகோல் வார்த்தை**:- அபிவிருத்தி

**முக்கி நபர்கள் :-**யோசியா,ரெகொபெயாம், சாலொமோன்

**திறவு கோல் அதிகாரம்** :- 2 நாளாகமம் 34, நியாயப்பிரமாணத்தைக் கண்டுபிடித்தல். 2நாள. 34.

திறவுகோல் வார்த்தைகள் - 2 நாளா. 7;14, 15;12, 16;9

என்நாமம் தரிக்கப்பட்ட என்ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்.

அவன் வெளியே ஆசாவுக்கு எதிர்கொண்டு போய், அவனை நோக்கி: ஆசாவே, யூதா பென்யமீன் கோத்திரங்களின் சகல மனுஷரே, கேளுங்கள்; நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார்; அவரை விட்டீர்களேயாகில், அவர் உங்களை விட்டுவிடுவார்.

தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது; இந்த விஷயத்தில் மதியில்லாதவராயிருந்தீர்; **ஆகையால் இதுமுதற்கொண்டு உமக்குயுத்தங்கள் நேரிடும்என்றான்**

## 2. நாளாகமம் சுருக்கம்

## பகுதி ஒன்று : சாலமோனின் ஆட்சி (1:1-9:31)

**I.** சாலொமோன் அரசு ஆரம்பம். **1:1-17**

A. சாலொமோனின் ஆராதனை 1:1-6

B. ஞானத்திற்கான விண்ணப்பம். 1:7-10

C. **ஞானத்தைக் கண்டடைதல்**. 1:11, 12

அப்பொழுது தேவன் சாலொமோனை நோக்கி: இந்த விருப்பம் உன் இருதயத்தில் இருந்தபடியாலும், நீ ஐசுவரியத்தையும் சம்பத்தையும் கனத்தையும், உன்பகைஞரின் பிராணனையும், நீடித்த ஆயுசையும் கேளாமல், நான் உன்னை அரசாளப்பண்ணின என் ஜனத்தை நியாயம் விசாரிக்கத்தக்க ஞானத்தையும் விவேகத்தையும் நீ கேட்டபடியினாலும், ஞானமும் விவேகமும் தந்திருக்கிறதுமல்லாமல், உனக்கு முன் இருந்த ராஜாக்களுக்காகிலும் உனக்குப் பின் இருக்கும் ராஜாக்களுக்காகிலும் இல்லாத ஐசுவரியத்தையும் சம்பத்தையும் கனத்தையும் உனக்குத் தருவேன் என்றார்.

ஞானத்தை கேட்டதானது என்னை ஆசீர்வதியும் என்று கேட்பதை விட என்னை ஆசீர்வாதமாக மாற்றும் என்று விண்ணப்பம் செய்வது சிறந்தது.

D. சாலொமோனின் செல்வம் 1:13-17

## IIஆலயம் நிறைவு பெறல். 2:1-7:2

A. **ஆலயத்தைக் கட்டுவதற்கு ஆயத்தமாதல்.** 2:1-18

B. **ஆலயத்தைக் கட்டுதல்.** 3:1-5:1

C. **ஆலயப் பிரதி**ஷ்டை 5:2-7:22

5:10. மகா பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கை பெட்டியை வைத்த பின்னர் அங்கிருந்து ஆசாரியர் யாவரும் வெளியே வந்தனர். அதன் பின்னர் வருடத்திற்கு ஒரு தடவை போய் வந்தனர்.

5:13-14 ஒருமனதோடு ஜெபித்து அவருடைய பிரசனத்தை பெற்றுக்கொண்டனர்.

7:1 சுய நலமற்ற ஜெபத்திற்கான பதில். சாலொமோன் ஜெபத்தை முடிக்கும் வரை காத்திருந்து. முடிந்தவுடன் அக்கினி வானத்திலிருந்து இறங்கி பட்சித்தது. இச் சம்பவமானது சாலொமோனின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டதாக அமைகிறது.

7:15-16 எருசலேம் என்றென்றும் கர்த்தருடைய நகரமாயிருக்கும்.

## III. சாலொமோனின் ஆட்சியின் மகிமை 8:1-9:28

A. **சாலொமோனின் எல்லைகள் விரிவடைதல்.** 8:1-6

B. **சாலொமோனின் எதிரிகள் அடக்கப்படல்.** 8:7-10

C. **மதச் செயற்பாடுகளின் பிரயோகம்.** 8:11-16

D. **சாலொமோனின் பொருளாதார நடவடிக்கைகள்.** 8:17, 18

E. **இளவரசி சோபாவின் விஜயம்.** 9:1-12

F. **சாலொமோனின் செல்வம்.** 9:13-28

## IV. சாலொமோனின் மரணம். 9:29-31

சாலொமோனுடைய ஆதியந்தமான மற்றநடபடிகள் தீர்க்கதரிசியாகிய நாத்தானின் புஸ்தகத்திலும், சீலோனியனாகிய அகியா எழுதின தீர்க்கதரிசனத்திலும், நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமைக் குறித்து ஞானதிருஷ்டிக்காரனாகிய இத்தோ எழுதின தரிசனங்களிலும் அல்லவோ

எழுதியிருக்கிறது. சாலொமோன் எருசலேமிலே இஸ்ரவேலையெல்லாம் நாற்பது வருஷம் அரசாண்டான். பின்பு சாலொமோன் தன்பிதாக்களோடே நித்திரையடைந்தான். அவனை அவன் தகப்பனாகிய தாவீதின் நகரத்தில் அடக்கம் பண்ணினார்கள். அவன் ஸ்தானத்திலே அவன் குமாரனாகிய ரெகொபெயாம் ராஜாவானான்.

## பகுதி இரண்டு: யூதாவின் இராஜாவின் ஆட்சி (10:1-36:23)

**I.** ரெகொபெயாம் ஆட்சி **10:1-12:16**

A. **இராஜ்ஜியங்களின் பிரிவுகள்.** 10:1-19

B. **யூதா இராஜ்ஜியம் பலமடைதல்.** 11:1-23

C. **யூதா இராஜ்ஜியம் பலவீனமடைதல்.** 12:1-12

12:1-5 நெருக்கடிகள் பாடுகள் தேவைகள் வரும்போது கர்த்தரை சார்ந்து வாழ்வதும். சஜமானா சூழ்நிலைக்கு திரும்பியதும் அவரை மறந்து பாவம் செய்வதும். மறுபடியும் பாடுகளுக்குள் போக வழிவகுக்கும்.

D. **ரெகொபெயாம் மரணமடைதல்** 12:13-16

**II. அபியாவின் ஆட்சி 13:1-22**

A. **அபியா யெரொபெயாம் யுத்தம்.** 13:1-20

13: 14-15 யூத ஜனங்கள் நெருக்கடி வரும்போது கர்த்தரை நோக்கி கூப்பிட்டு ஆர்பரித்து வெற்றி கொண்டார்கள்.

B. **அபியாவின் மரணம்.** 13:21, 22

**III. ஆசாவின் ஆட்சி 14:1-16:14**

A. **ஆசாவின் மதிப்பீடு** 14:1-8

B. **எதியோப்பியர்களை வெற்றி கொள்ளல்.** 14:9-15

14-11 ஆகாபின் உருக்கமான ஜெபம். இதை மனப்பாடம் பண்ணி ஜெபிப்பது சிறந்தது.

C. **அசாரியாவின் உரை** 15:1-7

152 தேவன் ஒருவரையும் கட்டாயப்படுத்துவதில்லை. மனிதன் தன் விருப்பப்படி வாழ அனுமதியுண்டு. ஆனால் அவரை தேடி அவர் கட்டளைக்கு கீழ்படிந்து அவரை நேசிக்கும் போது ஆசீர்வாதமுண்டு.

D. **ஆசாவின் சீர்திருத்தம்.** 15:8-19

15:15 முழுமனதோடு தேடியதால் சமாதானத்துடனும் பாதுகாப்புடனும் வாழ கர்த்தர் உதவினார்.

E. **சிரியர்களை வெற்றி கொள்ளல்** 16:1-6

F. **அனானி சிறையில் அடைத்தல்.** 16:7-10

G. **ஆசாவின் மரணம்.** 16:11-14

**IV** யோசபாத் ஆட்சி **17:1-20:37**

A. யோசபாத் மதிப்பீடு17:1-6

B. **ஆசாரியர்களுக்கும் லேவியர்களுக்கும் அறிவுரை** 17:7-9

அவன் அரசாண்ட மூன்றாம் வருஷத்தில் யூதாவின் பட்டணங்களிலே உபதேசம் பண்ணும்படிக்கு, அவன் தன் பிரபுக்களாகிய பென்னாயிலையும், ஒபதியாவையும், சகரியாவையும், நெதனெயேலையும், மிகாயாவையும், இவர்களோடே கூடச் செமாயா, நெதனியா, செபதியா, ஆசகேல், செமிரமோத், யோனத்தான், அதோனியா, தொபியா, தோபத் தோனியா என்னும் லேவியரையும், இவர்களோடேகூட ஆசாரியரான எலிஷமாவையும், யோராமையும் அனுப்பினான். இவர்கள் யூதாவிலே உபதேசித்து, கர்த்தருடைய வேதபுஸ்தகத்தை வைத்துக்கொண்டு, யூதாவின் பட்டணங்களிலெல்லாம் திரிந்து ஜனங்களுக்குப் போதித்தார்கள்.

C. இராஜ்ஜியம் விரிவடைதல். 17:10-19

D. நேச நாடுகளின் உடன்படிக்கை 18:1-19:4

E. இராஜ்ஜியத்தின் ஒன்றியம். 19:5-11

F. அம்மோனையும் மோவாப்பையும் வெற்றி கொள்ளல். 20:1-30

G. யோசபாத் ஆட்சியின் சுருக்கம். 20:31-34

H. யோசபாத்தின் பாவமும் மரணமும். 20:35-37

**V.** யெரொபெயாம் ஆட்சி **21:1-20**

A. **யெரொபெயாமின் மதிப்பீடு** 21:1-7

யோசபாத் தன்பிதாக்களோடே நித்திரையடைந்து, தாவீதின் நகரத்தில் தன் பிதாக்களண்டையிலே அடக்கம் பண்ணப்பட்டான். அவன் ஸ்தானத்திலே அவன் குமாரனாகிய யோராம் ராஜாவானான். அவனுக்கு யோசபாத்தின் குமாரராகிய அசரியா, ஏகியேல், சகரியா, அசரியா, மிகாவேல், செப்பத்தியா என்னும் சகோதரர் இருந்தார்கள். இவர்கள் எல்லாரும் இஸ்ரவேலின் ராஜாவாகிய யோசபாத்தின் குமாரர். அவர்களுடைய தகப்பன் வெள்ளியும் பொன்னும் உச்சிதங்களுமான அநேகம் நன்கொடைகளையும், யூதாவிலே அரணானபட்டணங்களையும் அவர்களுக்குக் கொடுத்தான். யோராம் சேஷ் டபுத்திரனானபடியினால், அவனுக்கு இராஜ்யத்தைக் கொடுத்தான். யோராம் தன் தகப்பனுடைய ராஜ்யபாரத்திற்கு வந்து தன்னைப்பலப்படுத்திக் கொண்ட பின்பு, அவன் தன்னுடைய சகோதரர் எல்லாரையும் இஸ்ரவேலின் பிரபுக்களில் சிலரையும் பட்டயத்தால் கொன்று போட்டான். யோராம் ராஜாவாகிற போது, முப்பத்திரண்டு வயதாயிருந்து, எட்டு வருஷம் எருசலேமில் அரசாண்டான். அவன் இஸ்ரவேல் ராஜாக்களின் வழியிலே நடந்து, ஆகாபின் வீட்டார் செய்தது போலச் செய்தான்; ஆகாபின் குமாரத்தி அவனுக்கு மனைவியாயிருந்தாள்; அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான் கர்த்தர் தாவீதுக்கும் அவன் குமாரருக்கும் என்றென்றைக்கும் ஒரு விளக்கைக் கட்டளையிடுவேன் என்று சொல்லி, அவனோடே பண்ணின உடன்படிக்கையினிமித்தம் தாவீதின் **வம்சத்தை அழிக்க சித்தமில்லாமலிருந்தார்.**

B. ஏதோமியர், லீப்னா எனபவர்களால் புரட்சி 21:8-11

C. எலியாவின் எச்சரிப்பு 21:12-15

D. **பெலிஸ்தியா, அரபியா என்பவர்களினால் படையெடுப்பு** 21:16, 17

E . யோராமின் மரணம். 21:18-20

**VI. ஆகாசியாவின் அட்சி 22:1-9**

**VII.** அத்தாலியாவின் ஆட்சி **22:10-23:15**

**VIII.** யோவாஸ் ஆட்சி **23:16-24:27**

**யோய்தாவின் புரட்சி** 23:16-21

அப்பொழுது யோய்தா தாங்கள் கர்த்தருடைய ஜனமாயிருக்கும்படிக்கு, தானும் சகல ஜனங்களும் ராஜாவும் உடன்படிக்கைபண்ணிக் கொள்ளும்படி செய்தான். அப்பொழுது ஜனங்களெல்லாரும் பாகாலின் கோவிலுக்குப் போய், அதை இடித்து, அதின் பலிபீடங்களையும், அதின் விக்கிரகங்களையும் தகர்த்து, பாகாலின் பூசாசாரியாகிய மாத்தானைப் பலிபீடங்களுக்கு முன்பாகக் கொன்று போட்டார்கள். தாவீது கட்டளையிட்ட பிரகாரம் சந்தோஷத்தோடும் சங்கீதத்தோடும் கர்த்தரின் சர்வாங்க தகனபலிகளை மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடியே செலுத்தத்தக்கதாக, யோய்தா கர்த்தருடைய ஆலயத்தை விசாரிக்கும் உத்தியோகங்களைத் தாவீது கர்த்தருடைய ஆலயத்துக் கென்று பகுத்து வைத்த லேவியரான ஆசாரியர்களின் கையில் ஒப்புவித்து, யாதொரு காரியத்தினால் தீட்டுப்பட்டவன் கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசியாதபடிக்கு, அதின் வாசல்களுக்குக் காவலாளரை நிறுத்தினான். நூறு பேருக்கு அதிபதிகளையும், பெரியவர்களையும், ஜனத்தை ஆளுகிறவர்களையும், தேசத்துச் சமஸ்த ஜனங்களையும் கூட்டிக் கொண்டு, ராஜாவைக் கர்த்தருடைய ஆலயத்திலிருந்து இறங்கப்பண்ணி, உயர்ந்த வாசல் வழியாய் ராஜஅரமனைக்குள் அழைத்து வந்து அரசாளும் சிங்காசனத்தின் மேல் ராஜாவை உட்காரப் பண்ணினார்கள். தேசத்து ஜனங்களெல்லாரும் மகிழ்ந்தார்கள்; அத்தாலியாளைப் பட்டயத்தால் கொன்ற பின்பு நகரம் அமரிக்கையாயிற்று.

B. **யோவாஸ் மதிப்பீடு 24:1-3**

யோவாஸ் இராஜாவாகிற போது ஏழுவயதாயிருந்து, நாற்பது வருஷம் எருசலேமில் அரசாண்டான்; பெயெர்செபா பட்டணத்தாளான அவன் தாயின் பேர் சிபியாள். ஆசாரியனாகிய யோய்தாவின் நாளெல்லாம் யோவாஸ் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். அவனுக்கு யோய்தா இரண்டு ஸ்திரீகளைவிவாகஞ் செய்துகொடுத்தான்; அவர்களால் குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

C. ஆலயப் புணர்நிர்மானம். 24:4-14

D. **யோய்தாவின் மரணம்.** 24:15-16.

E. **யோய்தாவின் மகன் கொலை** 24:17-22

F சிரியாவினால் யூதா அழிக்கப்படல். 24:23-24. ஆதியாகமத்தின் பின் அதிகளவான ஆண்டு வாழ்த மனிதன்

G. **யோவாஸ் மரணம்.** 24:25-27

**IX. அமசியா ஆட்சி 25:1-28**

அமசியா ஆட்சி 25:1-4

அமத்சியா இருபத்தைந்தாம் வயதிலே ராஜாவாகி, இருபத்தொன்பது வருஷம் எருசலேமில் அரசாண்டான். எருசலேம் நகரத்தாளாகிய அவனுடைய தாயின் பேர் யோவதானாள். அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். ஆனாலும் முழுமனதோடே அப்படிச் செய்யவில்லை. ராஜ்யபாரம் அவனுக்கு ஸ்திரப்பட்டபோது, அவன் தன் தகப்பனாகிய ராஜாவைக் கொலை செய்த தன்னுடைய ஊழியக்காரரைக் கொன்று போட்டான். ஆனாலும் பிள்ளைகளினிமித்தம் பிதாக்களும், பிதாக்களினிமித்தம் பிள்ளைகளும் கொலை செய்யப்படாமல், அவனவன் செய்த பாவத்தினிமித்தம் அவனவன் கொலை செய்யப்பட வேண்டுமென்று மோசேயின் நியாயப்பிரமாணபுஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி, கர்த்தர் கட்டளையிட்ட பிரகாரம், அவர்களுடைய பிள்ளைகளை அவன் கொல்லாதிருந்தான்.

B **ஏதோமியரை வெற்றி கொள்ளல்** 25:5-13

C **அமசியாவின் விக்கிரக ஆராதனை** 25:14-16

அமத்சியா ஏதோமியரை முறியடித்து, சேயீர் புத்திரரின் தெய்வங்களைக் கொண்டு வந்தபின்பு, அவன் அவைகளைத் தனக்குத் தெய்வங்களாக வைத்து, அவைகளுக்கு முன்பாகப்பணிந்து அவைகளுக்குத் தூபங்காட்டினான். அப்பொழுது, கர்த்தர் அமத்சியாவின்மேல் கோபமூண்டவராகி, அவனிடத்துக்கு ஒரு தீர்க்கதரிசியை அனுப்பினார். இவன் அவனை நோக்கி தங்கள் ஜனத்தை உமது கைக்குத்தப்புவிக்காதே போனஜனத்தின் தெய்வங்களை நீர் நாடுவானேன் என்றான். தன்னோடே அவன் இப்படிப்பேசினபோது, ராஜா அவனை நோக்கி உன்னை ராஜாவுக்கு ஆலோசனைக்காரனாக

வைத்தார்களோ? அதைவிட்டுவிடு நீ ஏன் வெட்டப்படவேண்டும் என்றான். அப்பொழுது அந்தத் தீர்க்கதரிசி அதை விட்டுவிட்டு நீர் இப்படிச்செய்து, என் ஆலோசனையைக் கேளாமற்போனபடியினால், தேவன் உம்மை அழிக்கயோசனையாயிருக்கிறார் என்பதை அறிவேன் என்றான்.

D. இஸ்ரவேலினால் யூதா தோற்கடிக்கப்படல். 25:17-24

E. அமசியாவின் மரணம்.25:25-28

**X. உசியாவின் ஆட்சி 26:1-23**

A. உசியாவின் மதிப்பீடு 26:1-5

அப்பொழுது யூதாஜனங்கள் எல்லாரும் பதினாறு வயதான உசியாவை அழைத்து வந்து, அவனை அவன் தகப்பனாகிய அமத்சியாவின் ஸ்தானத்திலே ராஜாவாக்கினார்கள் ராஜாதன் பிதாக்களோடே நித்திரையடைந்த பின்பு, இவன் ஏலோதைக்கட்டி, அதைத் திரும்ப யூதாவின் வசமாக்கிக்கொண்டான். உசியா ராஜாவாகிறபோது, பதினாறுவயதாயிருந்து, ஐம்பத்திரண்டு வருஷம் எருசலேமில் அரசாண்டான். எருசலேம் நகரத்தாளான அவன் தாயின் பேர் எக்கோலியாள். அவன் தன் தகப்பனாகிய அமத்சியா செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, தேவனுடைய தரிசனங்களில் புத்திமானாயிருந்த சகரியாவின் நாட்களிலே தேவனைத் தேட மனதிணங்கியிருந்தான். அவன் கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச் செய்தார்.

B. உசியாவின் வெற்றிகள். 26:6-15

**C. உசியாவின் பாவம்நிறைந்த காணிக்கை 26:16-21**

அவன் பலப்பட்டபோது, தனக்குக் கேடுண்டாகுமட்டும், அவனுடைய மனம் மேட்டிமையாகி, தன்தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்து, தூபபீடத்தின் மேல் தூபங்காட்டக் கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தான். ஆசாரியனாகிய அசரியாவும், அவனோடேகூடக் கர்த்தரின் ஆசாரியரான பராக்கிரமசாலிகளாகிய எண்பது பேரும், அவன் பிறகே உட்பிரவேசித்து, ராஜாவாகிய உசியாவோடு எதிர்த்து நின்று: உசியாவே, கர்த்தருக்குத் தூபங்காட்டுகிறது உமக்கு அடுத்ததல்ல; தூபங்காட்டுகிறது பரிசுத்தமாக்கப்பட்ட ஆரோனின் குமாரராகிய ஆசரியருக்கே அடுக்கும்: பரிசுத்த ஸ்தலத்தை விட்டு வெளியேபோம் மீறுதல் செய்தீர்: இது

தேவனாகிய கர்த்தராலே உமக்கு மேன்மையிராது என்றார்கள். அப்பொழுது உசியா கோபங் கொண்டான் அவன் தூபகலசத்தைத் தன்கையிலே பிடித்து ஆசாரியர்களோடு கோபமாய் பேசுகிறபோது ஆசாரியருக்கு முன்பாகக் கர்த்தருடைய ஆலயத்திலே தூபபீடத்தின் முன்நிற்கிற அவனுடைய நெற்றியிலே குஷ்ரரோகம் தோன்றிற்று. இது தேவனாகிய கர்த்தராலே தோன்றிற்று. பிரதான ஆசாரியனாகிய அசரியாவும் சகல ஆசாரியரும் அவனைப் பார்க்கும் போது, இதோ, அவன்தன் நெற்றியிலே குஷ்ட ரோகம் பிடித்தவனென்று கண்டு, அவனைத் தீவிரமாய் அங்கேயிருந்து வெளியேறப்பண்ணினார்கள். கர்த்தர் தன்னை அடித்ததினால் அவன் தானும் வெளியே போகத்தீவிரப்பட்டான். ராஜாவாகிய உசியா தன் மரணநாள்மட்டும் குஷ்டரோகியாயிருந்து, கர்த்தருடைய ஆலயத்துக்குப் புறம்பாக்கப்பட்டபடியினால், ஒரு தனித்த வீட்டிலே குஷ்டரோகியாய் வாசம் பண்ணினான்; அவன் குமாரனாகிய யோதாம் ராஜாவின் அரமனை விசாரிப்புக்காரனாயிருந்து, தேசத்தின் ஜனங்களை நியாயம் விசாரித்தான்.

D. உசியாவின் மரணம். 26:22, 23

**XI. The Reign of Jotham** யோதம் ஆட்சி **27:1-9**

**XII.** ஆகாஸ் ஆட்சி **28:1-27**

A. ஆகாஸ் மதிப்பீடு 28:1-4

ஆகாஸ் ராஜாவாகிறபோது இருபதுவயதாயிருந்து, பதினாறு வருஷம் எருசலேமில் அரசாண்டான்; ஆனாலும் அவன், தன் தகப்பனாகிய தாவீதைப் போல், கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்யாமல், 2நாளா28:2இஸ்ரவேல் ராஜாக்களின் வழிகளில் நடந்து, பாகால்களுக்கு வார்ப்பு விக்கிரகங்களைச் செய்தான். அவன் இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கிலே தூபங்காட்டி, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளுடைய அருவருப்புகளின்படியேதன் குமாரரை அக்கினியிலே தகித்துப் போட்டு, மேடைகளிலும், மலைகளிலும், பச்சையான சகல மரங்களின் கீழும் பலியிட்டுத் தூபங்காட்டிவந்தான்.

B. யூதாவின் தோல்வி 28:5-21

C. ஆகாஸ் விக்கிரக அராதனை 28:22-25

D. ஆகாஸ் மரணம். 28:26, 27

**XIII. எசேக்கியா ஆட்சி 29:1-32:33**

A. எசேக்கியா மதிப்பீடு 29:1, 2

B. எசேக்கியா கீழ் புணரமைப்பு 29:3-31:21

C. அசீரியாவின் படையெடுப்பு 32:1-22

D. எசேக்கியா குணமடைதல் 32:23-26

E. எசேக்கியா செல்வம் 32:27-30

தங்களைத் தாழ்த்தினபடியினால், கர்த்தருடைய கடுங்கோபம் எசேக்கியாவின் நாட்களிலே அவர்கள் மேல் வரவில்லை. எசேக்கியாவுக்கு மிகுதியான ஐசுவரியமும் கனமும் உண்டாயிருந்தது. வெள்ளியும் பொன்னும் இரத்தினங்களும் கந்தவர்க்கங்களும் கேடகங்களும் விநோதமான ஆபரணங் களும் வைக்கும்படியான பொக்கிஷசாலைகளையும், தனக்கு வந்து கொண்டிருந்த எசேக்கியாவின் மனமேட்டிமையினிமித்தம் அவனும் எருசலேமின் குடிகளும் தானியமும் திராட்சரசமும் எண்ணெயும் வைக்கும்படியான பண்டகசாலைகளையும், சகல வகையுள்ள மிருக ஜீவன்களுக்குக் கொட்டாரங்களையும், மந்தைகளுக்குத் தொழுவங்களையும் உண்டாக்கினான். அவன் தனக்குப் பட்டணங்களைக் கட்டுவித்து ஏராளமான ஆடுமாடுகளை வைத்திருந்தான். தேவன் அவனுக்கு மகாதிரளான ஆஸ்தியைக் கொடுத்தார். இந்த எசேக்கியா கீயோன் என்னும் ஆற்றிலே அணைகட்டி, அதின் தண்ணீரை மேற்கேயிருந்து தாழத் தாவீதின் நகரத்திற்கு நேராகத் திருப்பினான். எசேக்கியா செய்ததெல்லாம் வாய்த்தது.

**F. எசேக்கியா பாவம். 32:31** ஆகிலும் பாபிலோன் பிரபுக்களின் ஸ்தானாபதிகள் தேசத்திலே நடந்த அற்புதத்தைக் கேட்க அவனிடத்துக்கு அனுப்பப்பட்ட விஷயத்தில் அவன் இருதயத்தில் உண்டான எல்லாவற்றையும் அறியும்படி அவனைச் சோதிக்கிறதற்காக தேவன் அவனைக் கைவிட்டார். ( 2.இரா. 20;12)

G. எசேக்கியா மரணமடைதல். 32:32, 33

எசேக்கியாவின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்த நன்மைகளும் ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்திலும், யூதா இஸ்ரவேல் ராஜாக்களின் புஸ்தகத்திலும் எழுதியிருக்கிறது. எசேக்கியாதன் பிதாக்களோடே நித்திரையடைந்த பின்பு, அவனைத் தாவீது வம்சத்தாரின் கல்லறைகளில் பிரதானமான கல்லறையில் அடக்கம் பண்ணினார்கள்; யூதாவனைத்தும் எருசலேமின் குடிகளும் அவன் மரித்தபோது அவனைக் கனம் பண்ணினார்கள். அவன் குமாரனாகிய மனாசே அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

**XIV.** மனாசேயின் ஆட்சி **33:1-20**

**XV.** ஆமோனின் ஆட்சி **33:21-25**

**XVI.** யோசியாவின் ஆட்சி **34:1-35:27**

A. **யோசியாவின் மதிப்பீடு** 34:1, 2

யோசியா ராஜாவாகிற போது எட்டுவயதாயிருந்து, முப்பத்தொருவருஷம் எருசலேமில் அரசாண்டான். அவன் கர்த்தருடைய பார்வைக்குச் செம்மை யானதைச் செய்து, தன் தகப்பனாகிய தாவீதின் வழிகளில், வலது இடது புறமாக விலகாமல் நடந்தான்.

B. யோசியாவன் ஆரம்ப புணரமைப்பு அவன் தன் ராஜ்யபாரத்தின் எட்டாம் வருஷத்தில், தான் இன்னும் இளவயதாயிருக்கையில், தன்தகப்பனாகிய தாவீதின் தேவனைத் தேட ஆரம்பித்து, பன்னிரண்டாம் வருஷத்தில் மேடைகள் தோப்புகள் சுரூபங்கள் விக்கிரகங்கள் ஆகிய இவைகள் அற்றுப் போகும்படி, யூதாவையும் எருசலேமையும் சுத்திகரிக்கத் தொடங்கினான். அவனுக்கு முன்பாகப் பாகால்களின் பலிபீடங்களை இடித்தார்கள். அவைகளின் மேலிருந்த சிலைகளை வெட்டி, விக்கிரகத் தோப்புகளையும் வார்ப்பு விக்கிரகங்களையும் வெட்டு விக்கிரகங்களையும் உடைத்து நொறுக்கி, அவைகளுக்குப் பலியிட்டவர்களுடைய பிரேதக்குழிகளின் மேல்தூவி, பூஜாசாரிகளின் எலும்புகளை அவர்களுடைய பீடங்களின் மேல் சுட்டெரித்து, இவ்விதமாய் யூதாவையும் எருசலேமையும் சுத்திகரித்தான். அப்படியே அவன் மனாசே எப்பிராயீம் சிமியோன் என்னும் பட்டணங்களிலும், நப்தலிமட்டும், பாழான அவைகளின் சுற்றுப் புறங்களிலும் செய்தான். அவன் இஸ்ரவேல் தேசம் எங்குமுள்ள பலிபீடங்களையும் விக்கிரகத்தோப்புகளையும் தகர்த்து,

விக்கிரகங்களை நொறுக்கித் தூளாக்கி, எல்லாச் சிலைகளையும் வெட்டிப் போட்டபின்பு எருசலேமுக்குத் திரும்பினான்.

C. ஆலய புணரமைப்பு 34:8-13

D. நியாயப்பிரமாணம் கண்டெடுத்தல் 34:14-33

E. பஸ்கா கொண்டாட்டம் 35:1-19

F. யோசியாவின் மரணம். 35:20-27

யோசியா தேவாலயத்திற்கு அடுத்ததைத் திட்டப்படுத்தின இந்த எல்லா நடபடிகளுக்கும் பின்பு, எகிப்தின் ராஜாவாகிய நேகோ ஐபிராத்து நதியோரமான கர்கேமிஸ் பட்டணத்தின் மேல் யுத்தம் பண்ண வந்தான்; அப்பொழுது யோசியா அவனுக்கு விரோதமாய் யுத்தஞ் செய்யப்புறப்பட்டான். அவன் இவனிடத்துக்கு ஸ்தானபதிகளை அனுப்பி. யூதாவின்ராஜாவே, எனக்கும் உமக்கும் என்ன? நான் இப்போது உமக்கு விரோதமாய் அல்ல, என்னோடேயுத்தம் பண்ணுகிற ஒருவனுக்கு விரோதமாய்ப் போகிறேன்; நான் தீவிரிக்க வேண்டுமென்று தேவன் சொன்னார். தேவன் என்னோடிருக்கிறார், அவர் உம்மை அழிக்காதபடிக்கு அவருக்கு எதிரிடை செய்வதை விட்டுவிடும் என்று சொல்லச் சொன்னான். ஆனாலும் யோசியா தன்முகத்தை அவனை விட்டுத்திருப்பாமலும், நேகோ சொன்ன தேவனுடைய வாயின் வார்த்தைகளுக்குச் செவிகொடாமலும், அவனோடே யுத்தம்பண்ண வேஷம்மாறி, மெகிதோவின் பள்ளத்தாக்கிலே யுத்தம் பண்ணுகிறதற்கு வந்தான். வில்வீரர் யோசியா ராஜாவின் மேல் அம்பெய்தார்கள்; அப்பொழுது ராஜாதன் ஊழியக்காரரை நோக்கி: என்னை அப்புறம் கொண்டு போங்கள், எனக்குக் கொடிய காயம்பட்டது என்றான். அப்பொழுது அவனுடைய ஊழியக்காரர் அந்த இரதத்தின் மேலிருந்த அவனை இறக்கி, அவனுக்கு இருந்த இரண்டாவது இரதத்தின்மேல் ஏற்றி அவனை எருசலேமுக்குக் கொண்டு வந்தார்கள். அவன் மரணமடைந்து தன் பிதாக்களின் கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டான். யூதாவிலும் எருசலேமிலுமுள்ள யாவரும் யோசியாவுக்காகத் துக்கங் கொண்டாடினார்கள். எரேமியா யோசியாவின் மேல் புலம்பல் பாடினான். சகல பாடகரும் பாடகிகளும் இந்நாள் வரைக்கும் தங்கள் புலம்பல்களில் யோசியாவின் மேல்பாடுகிறார்கள். அவைகள் இந்நாள் வரைக்கும் இஸ்ரவேலிலே வழங்கிவருகிறது. அவைகள் புலம்பலின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது. யோசியாவின் மற்றவர்த்தமானங்களும், கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தில் எழுதியிருக்கிறதற்கொத்த அவன்

செய்த நன்மைகளும், அவனுடைய ஆதியோடந்த நடபடிகளும், இஸ்ரவேல் யூதா ராஜாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது.

XVII. யோவாகாசை ஆட்சி 36:1-3

XVIII. யோயாக்கீம் ஆட்சி 36:4-8

அவனுடைய அண்ணனாகிய எலியாக்கீமை யூதாவின் மேலும் எருசலேமின் மேலும் ராஜாவாக்கி, அவன் பேரை யோயாக்கீம் என்று மாற்றினான். அவன் தம்பியாகிய யோவாகாசை எகிப்தின் ராஜாவாகிய நேகோ எகிப்திற்குக் கொண்டு போனான். யோயாக்கீம் ராஜாவாகிறபோது இருபத்தைந்து வயதாயிருந்து, பதினொருவருஷம் எருசலேமில் அரசாண்டு, தன் தேவனாகிய கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். அவனுக்கு விரோதமாகப் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் வந்து, அவனைப் பாபிலோனுக்குக் கொண்டுபோக இரண்டு வெண்கலச் சங்கிலியால் அவனைக் கட்டினான். கர்த்தருடைய ஆலயத்தின் பணி முட்டுகளிலும் சிலவற்றை நேபுகாத்நேச்சார் பாபிலோனுக்குக் கொண்டு போய், அவைகளைப் பாபிலோனிலுள்ள தன்னுடைய கோவிலிலே வைத்தான். யோயாக்கீமுடைய மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்ததும், அவனிடத்திலே கண்டுபிடிக்கப்பட்டதுமான அவனுடைய அருவருப்புகளும், இஸ்ரவேல் யூதா ராஜாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது. அவன் ஸ்தானத்தில் அவன் குமாரனாகிய யோயாக்கீன் ராஜாவானான்.

XIX. **யோயாக்கீன் ஆட்சி** 36:9, 10

யோயாக்கீன் ராஜாவாகிற போது எட்டுவயதாயிருந்து, மூன்று மாதமும் பத்துநாளும் எருசலேமில் அரசாண்டு, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். மறுவருஷத்தின் ஆரம்பத்திலே நேபுகாத்நேச்சார் என்னும் ராஜா அவனையும், கர்த்தருடைய ஆலயத்தின் திவ்வியமான பணி முட்டுகளையும் பாபிலோனுக்குக் கொண்டுவரப்பண்ணி, அவன் சிறிய தகப்பனாகிய சிதேக்கியாவை யூதாவின்மேலும் எருசலேமின் மேலும் ராஜாவாக்கினான்.

XX. சிதேக்கியா ஆட்சி 36:11-21

A. சிதேக்கயா மதிப்பீடு 36:11, 12

1ம் 2ம் நாளாகமம்.

B. எருசலேம் அழிவு 36:13-21

**XXI. எருசலேமுக்கு திரும்பிச்செல்லுமாறு கோரேசுவினால் அறிவிக்கப்படல். 36:22, 23**

எரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்னவார்த்தை நிறைவேறும்படி, பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்திலே கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவினதினாலே, அவன். பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத்தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டுவிக்கும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ அவன் போகட்டும், அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடிருப்பாராக என்று பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அறிவிக்கிறார் என்று, தன்ராஜ்யம் எங்கும் எழுதியனுப்பி விளம்பரம் பண்ணினான்.

**நன்றி கர்த்தாவே**

**திராணி.**